# நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள்

**முன்னிலை :** திரு ஞா. நாகராஜன், B.E., AITP., MBA., B.G.L.,

ந.க. எண் 4969/2018 திலிம 3 நாள் 10.10.2018

**பொருள் :** அனுமதியற்ற மனைப்பிரிவுகள் / மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - திருநெல்வேலி மண்டலம் - தூத்துக்குடி மாவட்டம்- கோவில்பட்டி வட்டம் - பாண்டவர்மங்கலம் ஊராட்சி- பாண்டவர்மங்கலம் கிராமம் - சர்வே எண் 510/4B1, 4B2, 4B3, 5A, 5B, 5C-ல் 2.26 ஏக்கர் (9150.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

**படிக்க :**

1. அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017
3. அரசாணை எண் 55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 02.05.2018
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 13193/17 எல் ஏ 2, நாள் 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017
5. மனுதாரர் திரு காளிராஜன் மற்றும் திரு முருகேசபாண்டியன் என்பவரது விண்ணப்பம் நாள் 16.08.2018

---

**உத்தரவு :**

பார்வை 1, 2 மற்றும் 3-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 4-ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், பார்வை 5-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டிவட்டம், பாண்டவர்மங்கலம் ஊராட்சி, பாண்டவர்மங்கலம் கிராமம், சர்வே எண் 510/4B1, 4B2, 4B3, 5A, 5B, 5C-ல் 2.26 ஏக்கர் (9150.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ (மு)/ம.(திலி) எண் 411/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | - 9150.00 சமீ |
| மனைகளின் மொத்த எண்ணிக்கை | - 48 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | - 21 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | - 1 to 6, 8, 10 to 16, 21 to 25, 42, 43 |

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை - 27
விற்கப்படாத மனை எண்கள் - 7, 9, 17 to 20, 26 to 41, 44 to 48
விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு - 3977.16 சமீ
திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு - 401.45 சமீ (10.09%)
பூங்கா 1 பரப்பு - 401.45 சமீ (மனை எண் 47, 48)

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1. **பரிசீலனைக்கட்டணம்**

| | | |
|---|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக்கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | : | மனை எண் 17, 18 ரூ.1000/- |

பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்

2. **வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம்**

ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30- வீதம் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25- வளர்ச்சிக்கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்

**அ. வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத்தலைப்பு**

0217 Urban Development – 60 Other Urban Development Scheme-800.Other receipts AT
Receipts under Regularisation charges of Unapproved layout and Plots –DTCP
27 Non Taxation Fees – 30 Regularisation
(DPC 0217 60 800 AT 2730)

ஆ. வளர்ச்சிக்கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக்கணக்கில் நேரில் செலுத்தலாம்.
வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ---------------------------

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னர் சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 13.10.2017-ல் விதி எண் 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
திருநெல்வேலி - 5.

10/01/18

10/01/18

**இணைப்பு**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

**பெறுநர்**

வட்டார வளர்ச்சி அலுவலர்
கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்
தூத்துக்குடி மாவட்டம்

**நகல்**

1. திரு காளிராஜன் மற்றும் திரு முருகேசபாண்டியன், 9, பாரதி நகர், மெயின்ரோடு, கோவில்பட்டி - 628 501 (செயலாணை மட்டும்)
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தூத்துக்குடி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு)
3. சார்பதிவாளர், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு)
4. தொழில் நுட்ப வைப்பறை

பாண்டவர்மங்களம் ஊராட்சி தனி அலுவலர்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை:- திரு.அ.முருகானந்தம்

தி2/ | /2018 நாள் : 23.11.2018.

பொருள் : மனை வரன்முறை - தூத்துக்குடி மாவட்டம் - கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், பாண்டவர்மங்களம் ஊராட்சி கிராமம் நில அளவை எண் 510/4B1,4B2,4B3,5A,5B,5C –ல் அமைந்துள்ள மனைப்பிரிவு மனை எண்: 7,9,17 முதல் 20 வரை, 26 முதல் 41 வரை, 44 முதல் 46 வரை மட்டும் வரன்முறைப்படுத்தி உத்தரவிடல்.

பார்வை :
1. அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 04.05.2017.
2. அரசாணை எண் 172, வீட்டுவசதி மற்றம் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 13.10.2017.
3. திருநெல்வேலி மண்டலம், நகர் ஊரமைப்பு, துணை இயக்குநர் (பொ) அவர்களின் கடிதம் எண்: 4969/2018 திலிம3 நாள்: 10.10.2018.
4. திரு.காளிராஜன் மற்றும் திரு. முருகேச பாண்டியன் என்பவரின் விண்ணப்பம் நாள்: 14.11.2018

---------------

உத்திரவு:

பார்வை 3-ல் கண்ட கடிதத்தின் வழி தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், பாண்டவர்மங்களம் ஊராட்சி, கிராமம் சர்வே எண்: 510/4B1,4B2,4B3,5A,5B,5C -ல் அமையும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவிற்கு திருநெல்வேலி மண்டலம், நகர் ஊரமைப்பு, துணை இயக்குநர், அவர்களின் கடிதம் எண்: 4969/2018 திலிம3 நாள்: 10.10.2018-ன்படி, SOLD OUT PLOT FRAME WORK LAY OUT எண்:411/2018 எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைஎண்: 7,9,17 முதல் 20 வரை, 26 முதல் 41 வரை, 44 முதல் 46 வரை--க்கு கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

1. பாண்டவர்மங்களம் ஊராட்சி சர்வே எண்: 510/4B1,4B2,4B3,5A,5B,5C-ல் அமையப்பெற்ற மனை எண்: 7,9,17 முதல் 20 வரை, 26 முதல் 41 வரை, 44 முதல் 46 வரை மட்டும மட்டும் கூராய்வுக்கட்டணம் ரூ.500/- வீதம் இணையதளம் வழியாக 15.08.2018 மற்றும் 31.10.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது.
2. வரன்முறை கட்டணமாக ரூ.107280/-- உரிய அரசு தலைப்பில் 08.11.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

3. வளர்ச்சி கட்டணம் தொகை ரூ.89400/- வங்கிவரைவோலை எண்: 002732 நாள் 08.11.2018 அன்று செலுத்தப்பட்டது.
4. உரிய கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டு விட்டதால் பாண்டவர்மங்களம் ஊராட்சி கிராமம் சர்வே எண் 510/4B1,4B2,4B3,5A,5B,5C அமையும் மனை எண்: 7,9,17 முதல் 20 வரை, 26 முதல் 41 வரை, 44 முதல் 46 வரை மட்டும் வரன்முறைப்படுத்தி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மனையில் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பார்வை 3-ல் கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த மனைக்குப் பொருந்தும்.

23/11/18

தனிஅலுவலர்
பாண்டவர்மங்களம் ஊராட்சி

23/11/18

இணைப்பு – 1

7,9,17 முதல் 20 வரை, 26 முதல் 41 வரை, 44 முதல் 46 வரை

பெறுநர்:

திரு. காளிராஜன் மற்றும் திரு. முருகேச பாண்டியன்,
No 9 பாரதி நகர்,
மெயின்ரோடு,
கோவில்பட்டி.

நகல்:

1. தனி அலுவலர்,
பாண்டவர்மங்களம் ஊராட்சி.
2. சார்பதிவாளர்,
கோவில்பட்டி சார்பதிவகம்.